செ. கு. எண்: 079 நாள்: 09.08.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 9.8.2019

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அவலாஞ்சியில் **6.8.2019**, **7.8.2019** மற்றும் **8.8.2019** ஆகிய மூன்று தினங்களில் முறையே **405** மி.மீ., **820** மி.மீ. மற்றும் **911** மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டேன். நீலகிரி மாவட்ட நிர்வாகத்தின் கோரிக்கையின் அடிப்படையில், கூடுதலாக மாநிலப் பேரிடர் மீட்புக் குழுக்கள், தேசியப் பேரிடர் மீட்புக் குழுக்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, அனைத்துத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் மற்றும் **66 ராணுவ வீரர்கள்** உட்பட **மொத்தம் 491 நபர்கள்** உடனடியாக மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கனமழை மற்றும் நிலச்சரிவால் **பாதிக்கப்பட்ட 1704 பேர், 28 பேரிடர் மீட்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.** இம்மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான வேட்டி, சேலை, தலையணை மற்றும்

போர்வை போன்றவற்றை வழங்கவும், ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தவும் நான் உத்தரவிட்டுள்ளேன். நிலச்சரிவு மற்றும் இடிபாடுகளைச் சீர்செய்வதற்காக **29 ஜேசிபி இயந்திரங்கள்** ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புயல் மற்றும் மழை காரணமாக ஏற்படக்கூடிய நோய்களைத் தடுக்கும் விதமாக **23 நிரந்தர மருத்துவக் குழுக்களும், 13 நடமாடும் மருத்துவக் குழுக்களும்** அமைக்கப்பட்டு, அக்குழுவினர் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுமட்டுமின்றி **30 ஆம்புலன்ஸ் வாகனங்கள்** தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

காட்டுக்குப்பையில் கனமழையில் சிக்கியிருந்த 36 மின் பணியாளர்களும் பொதுமக்களும் இன்று பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். அவலாஞ்சியில் சிக்கியிருக்கும் 40 நபர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை ஹெலிகாப்டர் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு சூலூரில் உள்ள இந்திய விமானப்படை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப. ஆகியோர் உடனடியாக நீலகிரி மாவட்டத்திற்குச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன்.**

இந்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இடிபாடுகளில் சிக்கி, குந்தா வட்டத்தைச் சேர்ந்த திரு.குப்பன் என்பவரது மகன் **திரு.சென்னன்**, உதகை வட்டத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரது மனைவி **திருமதி விமலா**, திரு. அர்ஜுனன் என்பவரது மனைவி **திருமதி சுசீலா**, திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரது மகள் **செல்வி. பாவனா** மற்றும் அவரது மனைவி **திருமதி அமுதா** ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

**உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பச் சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு அவர்களது குடும்பத்தினருக்கு தலா பத்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**